பக்கங்கள் 15+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 15 வியாழக்கிழமை 27.02.2025 | அதிர்வு 211

## பிமல்–ஹக்கீம் நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம்

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் இன்று நாடாளுமன்றத்தில் 04 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







### வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால்

# யாழ். போதனா முடக்கம்

# நோயாளர் பெரும் அவதி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையால் வைத்தியசாலையில் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலைநிர்வாகத்திடம்பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று முதல் தொழிற்சங்கநடவடிக்கையைஆரம்பித்துள்ளது. 04 ▶

## இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழில் கடற்றொழிலாளர்கள் பெரும் போராட்டம்





(எஸ்.நிதர்ஷன்)

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் இன்று மீனவர்கள் முன்னெடுத்தனர்.

தீவகக் கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன. 02 ▶



# இந்திய மீனவர்களுக்கு எதிராக யாழில் கடற்றொழிலாளர்கள் பெரும் போராட்டம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பண்ணையில் உள்ள கடல் வள நீரியல் திணைக்களம் முன்பாகத் திரண்ட மீனவர்கள் அங்கிருந்து, இந்தியத் துணைத்தூதரகத்துக்குச் சென்று, அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இதன்போது "நிறுத்து நிறுத்து இழுவை மடி தொழிலை நிறுத்து!, தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாதே!, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்!, அள்ளாதே அள்ளாதே எமது வளத்தை அள்ளாதே!, வாழ விடு வாழ விடு எங்களை வாழ விடு!, எல்லை தாண்டி வந்து எம் இனத்தைப் பட்டினி ஆக்காதே" ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களால் நீரியல் வளத்துறை அலுவலகம், இந்தியத் துணைத்தூதரகம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தில் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, போராட்டக்காரர்கள் வருகை தந்த பாதைக்குப் போக்குவரத்துப் பொலிஸார் கடுமையான பாதுகாப்பை வழங்கியதோடு குறித்த பாதையில் பொதுமக்கள் பயணிக்க அனுமதி மறுக்கப்பட்டது. மேலும் பொலிஸார் கண்ணீர்ப் புகைகுண்டுகள் சகிதம் இந்தியத் துணைத் தூதுவராலயத்துக்குக் கடுமையான பாதுகாப்பை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.


















# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதியர்களும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அரச தாதியர் சங்கத்தினர் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையின் பிரதான வளாகத்தில் ஒன்றுகூடிய தாதியர்கள், "தாதியர்களுக்குப் பாதீட்டில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, குறைக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரி, பதவி உயர்வை பழைய முறைப்படி வழங்கு" ஆகிய பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


















# ரணிலின் வழியில் அநுர

## இது நவீனின் கண்டுபிடிப்பு





ரணில் விக்கிரமசிங்க வகுத்த வழியிலேயே தேசிய மக்கள் சக்தி அரசு பயணிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசு செயற்படுத்தி வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அன்று இட்ட அடித்தளத்தில் அநுர பயணிக்கின்றார் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசின் பாதீடு உறுதிப்படுத்துகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தால்தான் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதுபோலும்.

தேசிய மக்கள் சக்தி கனவுலகமொன்றை உருவாக்கியது. ஆனால், நடைமுறையில் வேறு விடயம் நடக்கின்றது. இது பற்றி கதைப்பதற்கு பலமான எதிர்க்கட்சி இல்லை. இருக்கின்ற எதிர்க்கட்சி தூங்குகின்றது." – என்றார்.

# மர்மமான முறையில் யுவதி ஒருவர் மரணம்

புத்தளம், கல்லடி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் யுவதி ஒருவர் மர்மமான முறையில் நேற்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார் என்று புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று அந்த யுவதி தனது வீட்



டில் மயங்கிய நிலையில் காணப்பட்ட நிலையில், அவரது பெற்றோர் அவரை புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதன்போது யுவதியைச் சோதனையிட்டு பார்த்த வைத்தியர்கள், யுவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

யுவதியின் உடற்பாகங்கள் அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்குப் பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புத்தளம் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பிமல்-ஹக்கீம்...**

கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

தன்னை நிதிக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ள விடாமல் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதி தன்னை நிதிக்குழுவில் இணைத்துக்கொள்ளவதாக உறுதியளித்திருந்தார் என்று சுட்டிக்காட்டிய ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி உறுதியளித்தும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு தனக்கு அனுமதி வழங்கவில்லை எனச் சபையில் குற்றம் சுமத்தினார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவரின் குற்றச்சாட்டையும் ஹன்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குமாறு தெரிவித்தார்.

**யாழ். போதனா...**

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை அரச வைத்திய அதிகாரிகள் இடைநிறுத்தியுள்ளமையால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச வைத்தியர்கள் சங்கத்தின் இந்தப் போராட்டத்தால் வைத்தியசாலையின் வழமையான செயற்பாடுகள் பலவும் இயங்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் பல்வேறு சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும், நோயாளர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட வேண்டும் எனவும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சிறுவர் நிலையத்தின் மீது தாக்குதல்!

(மஸ்கெலியா )

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை மல்லியப்பூ தோட்டத்தில் உள்ள சிறுவர் காப்பகத்தின் மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்கு பொருத்தப்பட்டிருந்த கதவு மற்றும் ஜன்னல் போன்றவற்றை சேதப் படுத்தியுள்ளனர். சிறார்களுக்காக இரசாயன மருந்து பாவிக்க படாமல் நடபட்டிருந்த தாவரங்கள் மற்றும் மரக்கன்று என்பன பிடுங்கி எறியப்பட்டுள்ளன என்று காப்பகத்தின் பணியாளர் திருமதி திலகவதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்பட்ட சிறுவர் காப்பகத்தை தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் போன்றன சிரமைத்துக் கொடுத்துள்ளன.

இன்னும் சில தினங்களில் அதற்கான மின்சார வசதி பெற்று தர தோட்ட நிர்வாகம் முன் வந்துள்ள நிலையில், இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் தொழிலாளர் குடியிருப்புகளுக்குச் செல்லும் தண்ணீர் குழாய்களும் அடிக்கடி களவாடபட்டு வருகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி , விஷமிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.



# யூனானி தினம் திருமலையில்!

2025 ஆம் ஆண்டுக்கான யூனானி தினம் நேற்று (26) திருகோணமலை யக்கப் பீச் ரிசோட்டில் நடைபெற்றது.

யூனானி மருத்துவத்தின் பாரம்பரிய சிறப்பையும், அதன் அறிவியல் அடிப் படையிலான பயன்பாடுகளையும் முன் னிறுத்தும் வகையில், யூனானி தினம் – 2025 திருகோணமலையில் நடைபெற்றது.

வைத்தியர் அப்துல் வஹாப் முஹம் மது மாசாத் தலைமையின் கீழ் இடம் பெற்ற இந்த நிகழ்வின் பிரதம விருந்தி னராகக் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர கலந்து கொண்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், டாக்டர்களும் கலந்து கொண்டனர்.

யூனானி மருத்துவத்தின் வளர்ச்சி, அதன் சமூகப் பயன்கள், மக்களின் நல னில் அதன் பங்களிப்பு குறித்து சிறப்புக ளும் உரைகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு, இயற்கை சிகிச்சை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்துவதோடு, யூனானி மருத்துவத் தின் வளர்ச்சியும் அதன் புதிய கண்டு பிடிப்புகளின் முக்கியத்துவம் பற்றி யும் தெளிவுபடுத்தப்பட்டது. விசேட ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சிறப்பு வைத்தியர்கள், பல்கலைக்கழகவிரிவுரை யாளர்கள், மாணவர்கள் சமர்பித்தனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உக்ரைனும் ஈழத் தமிழரும்

ஆட்சி மாறுகின்ற போது காட்சியும் மாறும். இது இலங்கைக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பொதுவான ஒரு விதிதான். அமெரிக்காவும் கூட இதற்கு விதிவிலக்கு அல்ல.

ஆட்சிகள், அரசுகள், அதிகார தரப்புகள் மாறினாலும் நாடுகளின் சர்வதேச உறவாடலும் கொள்கைப் போக்கும் அடிப்படையில் மாறுவதில்லை என்று பொதுவாகக் கூறப்பட்டாலும், அது உண்மையே அல்ல. ஆட்சித் தலைவர்கள் மாறும்போது அவர்களின் போக்குக்கும் கொள்கைக்கும் ஏற்ப சர்வதேச ஊடாட்ட முறைமைகளும் மாறும். சில சமயங்களில் தலைகீழாகவும் மாறும்.

அமெரிக்காவில் டொனால்ட் டிரம்பின் ஆட்சி மீண்டும் வந்திருப்பது அத்தகைய தலைகீழ் மாற்றங்களை தந்து நிற்பது கண்கூடு.

இதனால் நடுச்சந்திக்கு வந்திருக்கின்றது உக்ரைனின் எதிர்காலம். அதன் இறைமையும் கூட.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகள் அமைப்பில் இணைவதற்கு உக்ரைன் எடுத்த முடிவுதான் அதனை ரஷ்யாவுடன் பகையாளியாக்கியது. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் பங்காளிகளான ரஷ்யாவும் உக்ரைனும் எதிரிகளாக மோதுகின்ற நிலையை உருவாக்கிய அமெரிக்கா, இரு நாடுகளுக்கும் இடையில் யுத்தம் வெடித்த போது உக்கரைனின் பக்கம் நின்று அதை உஷார் படுத்தி, ஏத்தி விட்டுக் கொண்டிருந்தது. இப்போது உக்கிரைனை அம்போ என்று நட்டாற்றில் விட்டு விட்டு, ரஷ்யாவுடன் சமரசம் செய்து கொண்டு, உக்ரைனின் இறைமையையே கேள்விக்குறியாக்கி, கீழ்த்தரமான சர்வதேச அரசியல் ஊடாட்டத்தை முன்னெடுக்கின்றது அமெரிக்கா.

வல்லாதிக்க சக்திகளை நம்பி இத்தகைய பிரச்சினைகளில் கால் வைத்தால் காலகதியில் இதுபோன்ற துரோகங்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததுதான்.

ஈழத் தமிழர்களுக்கும் இந்த பாடத்தை எண்பதுகளின் பின்னர் நன்கு கற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது - எமது அருகில் இருக்கும் வல்லாதிக்க சக்தியான இந்திய உபகண்டத்திடமிருந்து.

இன்று ஈழத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை விட - வாழ்வியல் யதார்த்தங்களை விட - இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு, சுயாதிபத்தியம் பற்றி எல்லாம் முழங்கும் இந்தியாதான், எண்பதுகளில் ஈழத் தமிழ்ப் போராளிகள் குழுக்களுக்கு உத்தரப் பிரதேசத்தில் விசேட இராணுவப் பயிற்சிகளை அளித்து, ஆயுதங்களைக் கொடுத்து, அவர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களாகக் கொழும்புக்கு எதிராக ஏவி விட்டது. புதுடில்லியின் கயிற்றை விழுங்கிக் கொண்டு, தங்கள் வாழ்க்கையையே ஈகம் செய்த தமிழ்ப் போராளிகள் புதுடில்லியின் தேவை முடிவுற்ற பின்னர் நட்டாற்றில் விடப்பட்டனர் - இன்று உக்ரைன் நாட்டையும் அதன் இறைமையையும் கேள்விக்கு உள்ளாக்கும் விதத்தில் அமெரிக்கா அதனை நட்டாற்றில் விட்டுள்ள மாதிரி.

அமெரிக்காவின் கீழ்த்தர அரசியலை - அதன் வல்லாதிக்கத் திமிர்ப் போக்கை - இந்தச் சமயத்திலாவது ஐரோப்பிய நாடுகளும், கனடா போன்ற தேசங்களும் புரிந்து கொள்ளத் தவறுமானால் அவற்றுக்கு இனிமேல் மீட்சியே இல்லை என்பதுதான் உண்மை.

இது, தனியாக டிரம்ப் என்ற ஒரு தனி மனிதரின் போக்கினால் ஏற்பட்ட விளைவல்ல. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சுயரூபமே இதுதான். ஆள்கள் மாறும் போது - அதிகாரங்கள் மாறும்போது - கண்மூடித்தனமாகக் காட்சிகளை மாற்றும் கீழ்த்தரமான வல்லாதிக்க நாடு அமெரிக்கா என்பது இப்போது தெட்டத் தெளிவாகி வருகிறது.

அமெரிக்க வல்லாதிக்கத்தின் சர்வதேச ஊடாட்டம் என்பது வெறும் சுயநல அரசியல்தான் என்பதை வெளிப்படையாக நிரூபித்து இருக்கிறார் ட்ரம்ப். அவ்வளவுதான்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்த மாற்றம், அங்கு எதிரணிகளுக்கு இடையிலான ஆட்சி மாற்றத்தால் வந்தது. ஜோ பைடன் போய் அவரின் அரசியல் எதிரியான டிரம்ப் அதிகாரத்துக்கு வந்ததமையால் நேர்ந்தது.

ஆனால் ஈழத் தமிழர்கள் விடயத்தித்தில் இந்தியாவின் அந்தர் பல்டி - ஒரே கட்சியில், அம்மா - மகன் அதிகார மாற்றத்தினால் நடந்தது. இந்திரா காந்தி மறைந்து, ராஜீவ் காந்தி பதவியேற்றதும் நேர்ந்த காட்சி மாற்றத்தில் அடிபட்டுப் போனது ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும். அதுதான் நம் துரதிர்ஷ்டம்.





# ரம்ழான் மாதத்தை முன்னிட்டு உணவகங்களில் திடீர் சோதனை

**(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்)**

ரமழான் மாதத்தை முன்னிட்டு கல்முனை பிராந்தியத்திலுள்ள உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களை சோதனைக்கு உட்படுத்தும் விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டத்தை பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதி காரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் தலைமையிலான, சுகாதார வைத்திய அதிகாரிகளான டாக்டர் எம்.எம்.நௌஷாட், டாக்டர் ஜே.மதன், டாக்டர் என்.ரமேஷ், டாக்டர் திருமதி ஜீவா ஆகியோருடன் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லாபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (25) பழக்கடைகள், ஹோட்டல்கள், வெதுப்பகங்கள், வியாபார நிலையங்கள் உள்ளிட்ட உணவு கையாளும் நிறுவனங்கள் என்பன திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.



உணவகங்களின் தரத்தை மேம்படுத்தி சுகாதாரமானதும் பாதுகாப்பானதுமான உணவை பொது மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே இந்த வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சுகாதார விதி முறைகளை மீறிய உணவக உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் பாவிக்க முடியாத, சேதமடைந்த உணவு தாயாரிக்கும் பாத்திரங்களும் அகற்றப்பட்டன.

# ஹட்டன் வெலிஓயா பிரதேசத்தில் கைவிடப்பட்ட தோட்டத்தில் குடியிருப்பு

**(மஸ்கெலியா)**


ஹட்டன் வெலிஓயா பிரதேசத்தில் பல வருடங்களாகக் கைவிடப்பட்ட தோட்டத்தில் புதிதாக குடியிருப்பு அமைக்கப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதியில் பற்றைக் காடாக உள்ள பகுதிக்கு தீ வைத்ததால் அந்த பகுதியில் இருந்த மான் குட்டி ஒன்று தீ காயங்களுடன் மீட்கப்பட்டது என்று நல்லதண்ணி வனத் துறை அதிகாரி ரத்நாயக்க தெரிவித்தார்.

அவ்வாறு மீட்கப்பட்ட மான் குட்டி, தாய் மான் இல்லாத காரணத்தால் நேற்று உயிரிழந்து விட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வனப் பகுதியில் தீ வைப்பது மேலும் பற்றைக் காடாக உள்ள பகுதிகளில் வீடமைப்பு திட்டம் உருவாக்குவதால் சுதந்திர பறவைகள் மற்றும் மிருகங்கள் பாரிய அளவில் பாதிப்பை எதிர்நோக்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# வாகரை கட்டுமுறிவு மக்களை தாக்கிய வனவிலாகா அதிகாரிகள்

## ஸ்ரீநாத் எம்.பி கடும் கண்டனம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு வாகரை எல்லைக் கிராமமான கட்டுமுறிவை அண்டிய பகுதிகளில் 25, 30 வருடங்களுக்கு மேலாக வாழும் மக்களை நேற்று (26) வன இலாகா என்று கூறிக்கொண்டு வந்த அதிகாரிகள் மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

மானிடவியலுக்கு ஒவ்வாத நடைமுறைகளை அந்த மக்களின் மீது திணித்தும் அம்மக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

அங்குள்ள மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இ.ஸ்ரீநாத்துக்கு இது தொடர்பில் தெரிவித்ததை அடுத்து, சம்பவ இடத்துக்கு உடனடியாக சென்ற எம்.பி. மக்களின் ஆதங்கங்களையும், குமுறல்களையும் கேட்டறிந்தது கொண்டார்.

இது தொடர்பாக பிரதேச செயலாளருக்கு உடனடியாக தெரிவித்தார்.பிரதேச செயலாளர் ஊடாக அப்பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவகருக்கு அறிவுறுத்தல் விடுத்தார். குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று அங்கு அம்மக்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் பற்றி ஆய்வு செய்யுமாறு



பணிப்புரை விடுத்தார்.

சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அங்கு வசித்த மக்களின் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டன. அங்குள்ள மக்கள் மூர்க்கமாக தாக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களின் மனித உரிமை, மனிதாபிமானம் ஆகியவை மீறப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மனிதாபிமான ஆர்வலர்களுக்கு தெரியப்படுத்தினார். மனித உரிமை ஆணைக்குழு மற்றும் அது சார்ந்த அதிகாரிகளுக்கு தெரிவித்து அந்தப் பகுதியில் ஏற்பட்ட சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார் என்றும் உறுதியளித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டனமும் வெளியிட்டுள்ளார்.





# புத்தளத்தில் உதைபந்தாட்ட போட்டியில் ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணி சம்பியன்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம் லெஜென்ட்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட, அணிக்கு தலா 09 பேர்களை கொண்ட உதைபந்தாட்ட போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை (23) புத்தளம் ஸாஹிரா கல்லூரியின் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

08 அணிகள் கலந்து கொண்ட இந்தத் தொடரில் ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட், த்ரீ ஸ்டார்ஸ், மெட்ரிட் மற்றும் கல்பிட்டி பேர்ள்ஸ் ஆகிய 04 அணிகள் அரை இறுதி போட்டிகளுக்குத் தெரிவாகின. அரை இறுதிப் போட்டிகளில் ஆர்.ஜே. ட்ரான்ஸ்போர்ட் மற்றும் கல்பிட்டி பேர்ள்ஸ் ஆகிய அணிகள் இறுதி போட்டிக்கு முன்னேறின.

பரபரப்பான இறுதிப்போட்டியில் ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணி 02 : 01 கோல்களால் வெற்றி வாகை சூடியது.

தொடரின் சிறந்த வீரராக பேர்ள்ஸ் அணியின் ரில்வான் தெரிவானார். தொடரின் சிறந்த கோல் காப்பாளராக ஆர்.ஜே.ட்ரான்ஸ்போர்ட் அணியின் லுக்மான் தெரிவானார்.

புத்தளம் உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் எம்.எஸ். எம்.ரபீக் மற்றும் உதைப்பந்தாட்ட நடுவர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம்.பஸ்ரின் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

இதேவேளை, புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகரும், தலைவருமான முஹம்மது யமீன் இந்தத் தொடரில் நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு மேலங்கிகளையும் வழங்கி வைத்தார்.







# ஆண்டிமுனை தமிழ் மகா வித்தி. வருடாந்தப் பரிசளிப்பு விழா

**(உடப்பு க.மகாதேவன்)**

ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா செவ்வாய்க்கிழமை (25) பாடசாலையின் அதிபர் ந.பத்மானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 2023, 2024 வருடத்தில் பாடரீதியாகவும் தவணைப் பரீட்சையிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கஎில் உள்ள மாணவர்களுக்கு பரிசில்கஎும் சான்றிதழ்களும் பணமும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் புத்தளம் வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ.எச்.எம்.அர்ஜூன கலந்து கொண்டார். மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

அத்துடன் தமிழ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். கமலேந்திரனும் கலந்து கொண்டார்.

மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்கான அனுசரணையை ஜேர்மன் நாட்டில் வசிக்கும் வி.கந்தசாமி, லண்டனில் வசிக்கும் கா.அகிலநாதன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.









# வியட்நாமில் உலக தமிழர் வணிக மாநாடு!

வியட்நாமில் உலக தமிழர் வணிக மாநாடு சித்த மருத்துவர் திருத்தணிகாசலம் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பிரதம விருந்தினராக இந்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் மற்றும் திராவிட கழகச் செயலாளர் துரைசந்திரசேகர், இலங்கையின் மூத்த அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத், இவர்களுடன் சினிமா தயாரிப்பாளர் தங்கர்பச்சான, முன்னாள் ஜனாதிபதியின் இந்து விவகார இணைப்பாளர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா ஆகியோர் பங்கு பற்றி இருந்த னர்.

மதுரை ஆதீனம் சந்திரசேகர் சுவாமிகள், பாபுசர்மாவுக்குப் பொன்னால் போர்த்துக் கௌரவித்தார்.





# காரைதீவு ஆதி சிவன் ஆலய மகா சிவராத்திரி

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு அருள்மிகு ஸ்ரீ ஆதி சிவன் ஆலய வருடாந்த மகா சிவராத்திரி பெருவிழா நேற்று (26) புதன்கிழமை இரவு நடைபெற்றது.




# கன்னியா கிராம உத்தியோகத்தர் பிரிவில் இந்தியாவிலிருந்து வந்தோருக்கு வீடுகள்!




(ஹஸ்பர் ஏ.எச்.)

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுக்கான நிலைபேறான மீள் குடியேற்றத்துக்கும்மீள்ஒருங்கிணைவுக்குமான விரிவாக்கப்பட்ட ஆதரவுத் திட்டத்தின் ஊடாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கன்னியா கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள குறித்த பயனாளிகளின் வீட்டுத் திட்டமானது நேற்று முன்தினம் (25) திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார மற்றும் மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. பிரித்தானியத் தூதரம் மற்றும் நோர்வே அரசின் நிதிப்பங்களிப்புடன் இந்த வீடுகள் முழுமையாகத் திருத்தம் செய்யப்பட்டு பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன.

பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திலிருந்து 16 பயனாளிகளுக்கும், குச்சவெளி பிரதேச செயலகத்தில் இருந்து 17 பயனாளிகளுக்கும், மொறவெவ பிரதேச செயலகத்தில் இருந்து 07 பயனாளிகளுக்கும் மொத்தமாக 40 பயனாளிகளுக்கு இந்த வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

இதன்போது பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் நா. மதிவண்ணன், யு.என்.டி.பி. நிறுவனத்தின் திட்ட நிபுணர், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



# தெற்காசிய தடகளச் சம்பியன்ஷிப் போட்டியில் தலவாக்கலை இளைஞன் ஓட்டத்தில் முதலிடம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

பாகிஸ்தானின் இஸ்லாமபாத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற தெற்காசிய சம்மேளன தடகளச் சம்பியன்ஷிப் போட்டியில் நாட்டுக்கு குறுக்கே ஓடும் போட்டியில் கனிஸ்ட பிரிவில் இலங்கையின் வக்சன் விக்னராஜ் முதலிடம் பெற்றுள்ளார்.

போட்டித் தூரத்தை 31 நிமிடங்கள் 56 செக்கன்கள் 38 மில்லி செக்கன்களில் கடந்தே தலவாக்கலை மிடில்டன் தோட்டத்தைச் சேர்ந்த விக்னராஜ் முதலிடத்தைப் பெற்றிருந்தார்.

அவரின் சொந்த ஊரான தலவாக்கலை மிடில்டன் தோட்டத்துக்கு செவ்வாய்க்கிழமை (25) வருகைத் தந்த அவருக்கு பிரதேச மக்களால் தலவாக்கலை நகரில் அமோக



வரவேற்பளிக்கப்பட்டது.

கனிஷ்ட பிரிவில் இலங்கை அணி இரண்டாமிடத்தை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மூதூர் குடிசார் ஒன்றியத்தின் துணைக் குழுக்கள் செயலமர்வு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

மூதூர் குடிசார் ஒன்றியத்தின் துணைக்குழுக்களுக்கான செயலமர்வு மூதூர் கலாசார மண்டபத்தில் எம்.சீ.எப். இன் அழைப்பாளர் மொஹமட் புஹாரி தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலக பிரிவில் காணப்படும் குறைப்பா டுகள் தொடர்பில் உருவாக்கப்பட்ட துணைக் குழுக்களுடனான கலந்துரையாடல் மற்றும் திட்டமிடல் என்பன தொடர்பாக நெறிப்படுத்தப்பட்டது.

அத்தோடு ஒன்பது துணைக்குழுக்கள் தமது அறிக்கைகளையும் சமர்ப்பித்ததுடன் எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் செயலமர்வின் விரிவுரையாளராக வலயக் கல்வி பணிப்பாளர் ஜவாத் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# சம்மாந்துறையில் கல்வியியலாளருக்கு மகத்தான சேவை நலன் பாராட்டு விழா!

சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியம், வலயத்தில் நீண்ட காலம் கல்விச் சேவையாற்றிய ஆறு கல்வியியலாளர்களுக்கு மகத்தான சேவை நலன்பாராட்டு விழாவை நேற்று முன்தினம் (25) செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பழத்தோட்ட விடுதியில் நடத்தியது.

ஒன்றியத் தலைவர் எம்.எம். எம்.ஜௌபர் தலைமையில் விழா இணைப்பாளர் எஸ். எல்.நிஷார் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்வி சேவையாற்றி ஓய்வு பெற்ற சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான வி.ரி. சகாதேவராஜா, ஏ.எல்.ஏ.கபூர், மற்றும் ஆசிரிய ஆலோசகர்களான வை.பி.யூசுப், இசட்.எம்.மன்சூர், எஸ்.எல்.அக்பர், எஸ்.சிறாஜ்தீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்துமடல் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.




சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றிய தலைவருமான வி.ரி.சகாதேவராஜாவுக்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார் . வாழ்த்து மடலை ஆசிரிய ஆலோசகர் இசட். எம்.றிஸ்வி யாத்து வாசிக்க வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் அதனை வழங்கி கௌரவித்தார். கூடவே முறைசாரா கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.எல் .அகமட்லெவ்வை சமூகமளித்திருந்தார்.

அதேபோல், ஓய்வு பெற்ற ஏ.எல்.ஏ.கபூர் வைபி.யூசுப், இசட். எம்.மன்சூர், எஸ்.எல்.அக்பர், எஸ். சிறாஜ்தீன் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

விழாவில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து கொண்டார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம் .வை.அரபாத் முகைடீன் ,எச். நைரூஸ்கான், பி.பரமதயாளன், வலயக் கணக்காளர் சீ.திருப்பிரகாசம், ஆசிரிய வள நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எல்.மஜீத், என்.எம்.நௌசாட் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# சூட்கேசில் கொண்டு வந்த பெண்ணின் சடலத்தை ஆற்றில் எறிவதற்கு முயன்ற தாய், மகள் கைது

சூட்கேசில் கொண்டுவந்த பெண்ணின் சடலத்தை கங்கையாற்றில் வீச முயன்ற தாய், மற்றும் மகளை கொல்கொத்தா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொல்கத்தாவின் குமர்துலி பகுதியில் உள்ள கங்கை நதிக்கரையில் ஏராளமானோர் யோகா பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது காரில் இருந்து இறங்கிய இரண்டு பெண்கள் இழுக்க முடியாத பாரத்துடன் சூட்கேசுடன் வந்தனர்.

இதையடுத்து யோகா பயிற்சிக்கு வந்த ஒருவர், 'சூட்கேசில் என்ன இருக்கிறதுஅதை ஏன் ஆற்றில் வீச செல்கிறீர்கள்' என கேட்டுள்ளார். அதற்கு அந்த பெண்கள், 'எங்கள் செல்ல நாய் இறந்து விட்டது. அதை ஆற்றில் வீச வந்தோம்' என, தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து ஏராளமானோர் அங்கு திரண்டு அவர்களை மாறி மாறி கேள்வி கேட்டதால் வேறு வழியின்றி அதில் ஒரு பெண், சூட்கேசில் இருப்பது தனது அண்ணியின் சடலம் என்றும், அவர் தற்கொலை செய்ததால் சடலத்தை ஆற்றில் வீச கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து, அங்கிருந்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இரண்டு பெண்களிடமும், பொலிஸார் நடத்திய விசாரணையில், இருவரும் கொல்கத்தா அருகேயுள்ள கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதும், இருவரும் தாய், மகள் என்பதும் தெரியவந்தது.

சூட்கேசில் சடலமாக இருக்கும் பெண், அவர்களது உறவினர் என்பதும் தெரியவந்தது. அந்த பெண் கொலை செய்யப்பட்டரா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கும்பமேளாவில் 65 கோடி பேர் நீராடினர்: சிவராத்திரி விழாவுடன் நிறைவடைந்தது



பிரயாக்ராஜ் நகரில் கடந்த 45 நாள்களாக நடைபெற்ற சிவராத்திரி புனித குளியலுடன் மகா கும்பமேளா நேற்று முடிவடைந்தது. இதையடுத்து பிரயாக்ராஜ் நகரம் இயல்புநிலைக்கு திரும்புகிறது.

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி மகா கும்பமேளா தொடங்கியது. இவ்விழாவை முன்னிட்டு, தினமும் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர். பல்வேறு அகாராக்களைச் சேர்ந்த துறவிகள் இதில் பங்கேற்றனர்.

உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவாக இது அமைந்தது. இதனால், பிரயாக்ராஜ் நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. மகா கும்பமேளாவில் பங்கேற்றவர்கள் வாராணசி காசி விஸ்வநாதர் கோயில், அயோத்தி ராமர் கோயில் உட்பட அம்மாநிலத்தின் முக்கிய கோயில்களுக்கும் சென்று சாமி தரிசனம் செய்தனர். இதுவரை 65 கோடிக்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் நேற்று மகா சிவராத்திரி கொண்டாடப்பட்டது. இந்த நாள் மகா கும்பமேளாவின் கடைசி நாள் என்பதால் கோடிக்கணக்கானோர் நேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர். இதுமட்டுமல்லாமல் மகா கும்பமேளாவில் பங்கேற்ற நாக சாதுக்கள் மற்றும் துறவிகள், பிரயாக்ராஜ் நகரிலிருந்து டிராக்டருடன் இணைக்கப்பட்ட தேர்களில் வாராணசிக்கு ஊர்வலமாக சென்றனர்.

மகா கும்பமேளாவின் இறுதி நாளில், சிவன் வசிப்பதாக நம்பப்படும் காசி விஸ்வநாதர் கோயிலில் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்ச்சியில் அவர்கள் பங்கேற்றனர். அங்கு உடல் முழுவதும் திருநீறு பூசியபடி இரவு முழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து ஜுனா அகாராவின் தலைவர் மஹந்த் பிரேம் கிரி நேற்று காலையில் கூறும்போது, "காசி விஸ்வநாதரின் முன் நாங்கள் தலை வணங்குவோம்" என்றார்.

மகாகும்பமேளா நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், சில சாதுக்கள் உள் விவகாரங்களை மேற்பார்வையிடவும் அகாரா தேர்தலுக்கு தயாராகவும் வாராணசியில் தங்கி இருப்பார்கள். மற்றவர்கள் தங்கள் ஆசிரமங்களுக்கு திரும்பிச் செல்வார்கள். எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் நடைபெறவுள்ள கும்பமேளாவில் இவர்கள் மீண்டும் ஒன்று கூடுவார்கள். இதற்கு அடுத்தபடியாக பிரயாக்ராஜ் நகரில் வரும் 2031 ஆம் ஆண்டு மகா கும்பமேளா நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மகா கும்பமேளாவுக்காக பிரயாக்ராஜ் நகரில் திரிவேணி சங்மத்தின் கரையோர பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள் அகற்றப்பட உள்ளன. பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்த பிரயாக்ராஜ் நகரம் 2 மாதங்களுக்குப் பிறகு படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்ப உள்ளது.




# பிரித்தானியாவில் வேலை இழக்கும் அபாயத்தில் ஆயிரக்கணக்கானோர்

பிரித்தானியாவின் மருத்துவ அமைப்புகளில் ஒன்றான தேசிய சுகாதார சேவை அமைப்பில் பணியாற்றும் ஆயிரக்கணக்கானோர் வேலை இழக்கவுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானியாவின் மருத்துவ அமைப்புகளில் ஒன்றான தேசிய சுகாதார சேவை அமைப்பில் (NHS England) பணியாற்றும் ஆயிரக்கணக்கானவர்களை பிரித்தானிய சுகாதாரச் செயலரான வெஸ் ஸ்ட்ரீட்டிங் பணிநீக்கம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இங்கிலாந்து NHS அமைப்பின் தலைவராக இருந்த அமண்டா பிரிச்சார்ட் , பிரித்தானிய சுகாதாரச் செயலரான வெஸ் ஸ்ட்ரீட்டிங் கொடுத்த அழுத்தம் காரணமாக பதவி விலகிவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், அவருக்கு பதிலாக அந்த பதவிக்கு சர் ஜிம் மேக்கீ என்பவரை வெஸ் ஸ்ட்ரீட்டிங் நியமிக்கப்படவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், NHS அமைப்பின் புதிய யுகத்தை உருவாக்க இருப்பதை இலக்காகக் கொண்டுள்ள வெஸ் ஸ்ட்ரீட்டிங், அதற்காக அந்த அமைப்பை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்புவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இங்கிலாந்து NHS அமைப்பின் தலைவராக இருந்த அமண்டா பிரிச்சார்டைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான பணியாளர்கள் வேலை இழக்க இருக்கிறார்கள் என அவர் தெரிவித்துள்ளார்,





# 300 நோயாளிகள் துஷ்பிரயோகம் : பிரான்ஸ் மருத்துவர் வாக்குமூலம்!

சிகிச்சைக்காக வந்த 300 பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில், முன்னாள் பிரான்ஸ் அறுவைசிகிச்சை மருத்துவர் ஜோல் லே மீது வழக்குத் தொடரப்பட்ட விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும் குறித்த மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்த 300 பேரில் பெரும்பாலானோர் குழந்தைகள் என்பது தெரியவந்துள்ளதுடன் இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தான் மிகவும், அறுவறுக்கத்தக்க செயல்களை செய்துள்ளார் எனவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராகத் தான் மிக மோசமான குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளேன் என்றும் அவர்கள் அடைந்த காயங்களை ஆற்ற முடியாது என்று ஒப்புக்கொள்கிறேன் என்று மருத்துவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் இவரது குற்றம் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜோல் லே மீது, அண்டை வீட்டைச் சேர்ந்த 6 வயது சிறுமி, தன்னை பாலியல் ரீதியாக சீண்டியதாகக் கொடுத்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பொலிஸார் அவரது வீட்டை சோதனை நடத்தினர்.

அப்போது, அவரது வீட்டிலிருந்து 3,00,000 புகைப்படங்களும் 650 மோசமான விடியோக்களும், அவர் செய்த பாலியல் துன்புறுத்தல்களைப் பற்றி மருத்துவர் கைப்பட எழுதி வைத்திருந்த நோட்டுப் புத்தகங்களும் பொலிஸாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து 4 குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்குகளில் 2020ஆம் ஆண்டு குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட மருத்துவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தவழக்குவிசாரணையின்போது தான், மருத்துவர் தன்னிடம் சிகிச்சைக்காக வருபவர்களுக்கு பெரும்பாலும் குழந்தைகளுக்கு மயக்க மருந்து கொடுத்து பாலியல் துன்புறுத்தல் செய்ததை ஒப்புக் கொண்டார்.

மருத்துவர் அளித்த தகவல் மற்றும் கிடைத்த விடியோ, புகைப்படங்களின் அடிப்படையில், அவர் 158 ஆண்கள், ஏராளமான குழந்தைகள் 141 பெண்களை பாலியல் வன்கொடுமை செய்தார் என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை தற்போது நீதிமன்றத்தில் தொடங்கியுள்ள நிலையில் உலகளவில் இந்த வழங்கு பெரும் பேசு பொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கம் 02

கனடா முரசு

வியாழக்கிழமை 27/02/2025

## க்யூபெக்கில் பறவைக் காய்ச்சல்: 14 லட்சம் பறவைகள் பாதிப்பு

க்யூபெக்கில் உள்ள இரு கோழிப்பண்ணைகளில் கடந்த நவம்பரில் பறவை காய்ச்சல் கண்டறியப்பட்டது என கனேடிய உணவு ஆய்வு அமைப்பு (CFIA) தகவல் வெளியிட்டுள் 02



# Five Eyes அமைப்பிலிருந்து கனடாவை வெளியேற்ற அழுத்தம் கொடுக்கும் அமெரிக்கா

**Five Eyes அமைப்பிலிருந்து கனடாவை வெளியேற்ற அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

**கனடா, Five Eyes alliance என்னும் அமைப்பில் அங்கத்துவம் பெற்ற நாடாக இருந்து வருகின்றது. உளவுத்தகவல்கள் ஒத்துழைப்புக்காக 1941ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில், கனடாவுடன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் கூட்டாளர்களாக உள்ளன.**

இந்நிலையில், வெள்ளை மாளிகை மூத்த அலுவலரும், அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நெருங்கிய ஆலோசகர்களில் ஒருவருமான பீற்றர் நவாரோ என்பவர், தற்போது கனடாவை Five Eyes அமைப்பிலிருந்து கனடாவை வெளியேற்ற அழுத்தம் கொடுத்து வருகிறார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, அடுத்த மாதம், அதாவது, மார்ச் மாதம் 9ஆம் திகதி தனது பிரதமர் பதவியிலிருந்து விலகும் நிலையில், அடுத்து கனடாவுக்கு என்ன நடக்கும்என்பதுகேள்விக்குறியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டொரண்டோவில் சட்டவிரோதமாக ஆயுதம், போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது

டொரண்டோவில் சட்டவிரோதமாக ஆயுதம் மற்றும் போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கை தொடர்பில் டொரண்டோ பொலிஸ் சேவை (TPS) தெரிவிக்கையில்,

பார்க்டேலில், ஜேம்சன் அவென்யூ மற்றும் குயின் ஸ்ட்ரீட் வெஸ்ட் பகுதியில் உள்ள வீடொன்றில், பெப்ரவரி 23 அன்று மாலை 6 மணியளவில் அதிகாரிகள் தேடுதல் உத்தரவை அமல்படுத்தினர்.

அப்போது, வீட்டில் இருவர் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது. 02

அவர்களில் ஒருவரிடம் .45 கலிபர் Glock எனும் ஏற்றப்பட்ட அரைதானியங்கி துப்பாக்கி மற்றும் போதைப்பொருள்கள் இருந்தன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டாவது நபர் அனுமதியின்றி போதைப்பொருள்களை வைத்திருந்தார் என கூறப்படுகிறது.

மேலும் சந்தேக நபர்கள் மீது சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்தமை, போதைப்பொருள்களை கடத்த முயன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.





# கனடாவில் இன்று முதல் மீண்டும் பனிப்பொழிவும் உறைபனி தரையும்

வாரத்தின் தொடக்கத்தில் வெப்பமான காலநிலையை எதிர்கொண்ட டொரொன்டோவில் இன்று முதல் மீண்டும் பனிப்பொழிவும் உறைபனித் தரையும் எதிர்கொள்ளக்கூடும் என கனடா சுற்றுச்சூழல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, அதிகபட்ச வெப்பநிலை 3 பாகை செல்சியசாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இரவு 0 பாகை செல்சியசாக வெப்பநிலை குறையும் என்பதுடன் மாலை நேரத்தில் 2 - 4 சென்றி மீற்றர் வரை பனிப்பொழிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, இந்த மாதம் ஆரம்பத்தில் தொடர்ந்து ஏற்பட்ட பனிப் புயல்களில் 50 சென்றிமீற்றருக்கும் அதிகமான பனி வீழ்ந்ததன் பின்னர், நகரம் காணும் முதல் பனிப்பொழிவு என கூறப்படுகிறது.

இதேவேளை, இன்று மற்றும் நாளை மேகமூட்டம் நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.



அந்த வகையில், இன்று 40 வீத மழை அல்லது பனித்துளிகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும், நாளை 60 வீத பனிப்பொழிவு அல்லது மழை பெய்யும் சாத்தியம் உண்டு எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.






## க்யூபெக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது. தற்போது, க்யூபெக்கில் 58 இடங்களில் இந்த வைரஸ் பதிவாகியுள்ளதுடன், மொத்தம் 14,65,500 பறவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

220 இடங்களில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளதுடன், 18 மில்லியனுக்கும் அதிகமான பறவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கனடாவில் மனிதனுக்கு முதல் முறையாக பறவைக் காய்ச்சல் தொற்று உறுதி செய்யப்பட்டது. கடந்த நவம்பரில் 13 வயது சிறுமி ஒருவருக்கு இந்த வைரஸ் தொற்றியது. அவரது உடல்நிலை மோசமடைந்து, இரண்டு மாதங்களுக்கு பின் அவர் மருத்துவ மனையிலிருந்து வெளியேறினார்.

கடந்த மாதம் அமெரிக்காவின் லூயிஸியானா மாநிலத்தில் ஆவி காய்ச்சல் பாதித்த ஒருவர் உயிரிழந்தார், இது அமெரிக்காவில் முதல் சம்பவமாக கருதப்படுகிறது.

பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் (MUHC) உள்ள தொற்றுநோய் நிபுணர் டாக்டர் டொனால்டு வின்ஹ், பண்ணை எஜமானர்கள் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எச்சரித்துள்ளார்.

பறவைக் காய்ச்சல் காற்றில் பறக்கும் தீ போல வேகமாக பரவக்கூடியது என தெரிவித்துள்ளார்.

இது பறவைகளுக்கு மட்டுமல்லாமல், மற்ற பாலூட்டிகளுக்கும் மிகப் பெரிய அபாயத்தை ஏற்படுத்தும் என்று கடந்த சில வருடங்களில் நாம் கண்டறிந்துள்ளோம்.” இதனால், கோழிப் பண்ணை உரிமையாளர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.